மேன்மதி கோவை தமிழ் மன்றம்

சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

MENMATHI KOVAI TAMIL MANDRAM

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

# அவ்வையார் பாடல்களில் இயற்கை

**முனைவர் சொ.கோகில மீனா**

உதவிப் பேராசிரியர்,தமிழ்த்துறை,
சக்தி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
ஒட்டன்சத்திரம்,திண்டுக்கல் மாவட்டம்.
Email:srimeena1986@gmail.com

# Nature in the Songs of Avvaiyar

Dr.S.KOHILA MEENA,

Assistant Professor of Tamil,
Sakthi College of Arts &Science for Women,Oddancathram,Dindigul(Dt).
Cell No-9095040184
Email:srimeena1986@gmail.com

## Abstract

The life of the ancient Tamils was based on the nature of the two spheres of life, the internal and external, the land and the time. The nature of both the land and the time mentioned in the Tolkappiyam is called nature. In each period in which the Tamil literature of the Sangam period emerged and developed, a specific field of literature emerged and developed. They mostly sang about people who lived in harmony with nature. Such literature was admired by both the wise and the ignorant. The poets of the Sangam period lived a life in harmony with nature, which is why they were able to sing songs related to nature.

Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

More than thirty female poets have sung in Sangam literature. Among them, Avvaiyar was an incomparable woman who combined deep scholarship, political inclination, fearlessness, poetry and compassion. The purpose of this article is to examine the thoughts about nature that can be seen in her songs.

## முன்னுரை

பழந்தமிழர் வாழ்வின் வாழ்க்கைக் களமாகிய அகமும், புறமும், நிலமும், காலமுமாகிய இரண்டின் இயல்போடு அமையும். தொல்காப்பியம் கூறும் நிலம், பொழுது ஆகிய இரண்டின் இயல்பே இயற்கை எனப்படும். சங்ககாலத் தமிழ் இலக்கியங்கள் தோன்ற ஆரம்பித்து வளர்ந்த ஒவ்வொரு காலச்சூழ்நிலையிலும், ஒரு குறிப்பிட்டத் துறை இலக்கியங்களாகத் தோன்றி வளர்ந்தன. அவைப் பெரும்பாலும் இயற்கையோடு இணைந்து வாழ்வு கண்ட மக்களைப் பாடின. அத்தகைய இலக்கியங்களைச் சான்றோரும், ஆன்றோரும் போற்றினர். சங்ககாலப் புலவர்கள் இயற்கையோடு இணைந்த வாழ்வை வாழ்ந்தார்கள், அதனால்தான் இயற்கையைச் சார்ந்த பாடல்களை அவர்களால் பாட முடிந்தது. சங்க இலக்கியத்தில் முப்பதுக்கும் மேற்பட்ட பெண்பாற் புலவர்கள் பாடியுள்ளனர். அவர்களுள் ஆழ்ந்தப் புலமையும், அரசியல் நாட்டமும், அஞ்சா நெஞ்சமும், கவிபாடும் கற்பனையும் ஒருங்கேயமைந்த ஒப்பிலாப் பெண்மணியாகத் திகழ்ந்தவர் அவ்வையார் ஆவார். இவரின் பாடல்களில் காணலாகும் இயற்கைப் பற்றியச் சிந்தனைகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### இயற்கை-சொல்விளக்கம்

இயற்கை என்பது இயல்பானது; மனித சக்தி இல்லாமல் தானே தோன்றியப் பொருள்கள் அனைத்தும் இயற்கை எனப்படும்.

Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

இதனைத் தொல்காப்பியர்,

**“நிலம்நீர் தீவளி விசும்பொடு**
**ஐந்துங்கலந்த மயக்கம் உலகம்”** **(தொல்.மரபு-90)**

இவ்வைந்தும் இணைந்தது உலகம் என்று கூறுகிறார். இயற்கை என்ற சொல்லிற்க்கு “இலக்கணம், பான்மை, சுபாவம், வழக்கம், நிலைமை, கொள்கை, என்று பல பொருள்களைக் (கழக அகராதி ப.114)-ல் கூறுகிறது”. கௌரா தமிழ் அகராதி, “இயல்பு, ஏது, குணம், தகுதி, திராணி,முறைமை,என்று பலப் பொருள்களைக் கூறுகிறது. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, “மனிதனால் உண்டாக்கப்படாமல் தானாகவே காணப்படும் (மலைநீர்) போன்ற பொருள் அல்லது (மழைநீர்,இடி,காற்று) போன்ற சக்தி என்று பொருள் தருகிறது”. இதனால் நாம் கண்ட கருத்துகளைக் கொண்டு “இயற்கை” என்ற சொல் நம்மைச் சுற்றியிருக்கின்ற மனிதனால் உண்டாக்கப்படாத நிலம், நீர், காற்று, வானம், தீ ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது எனக் கொள்ளலாம்.

**அவ்வைக் கூறும் இயற்கை**

சங்க இலக்கியத்தில் அவ்வையார் பாடியப் பாடல்களான ஐம்பத்தொன்பதுள் அகம் பற்றியன இருபத்தாறு; புறம் பற்றியன முப்பத்து மூன்று பாடல்கள். அவ்வையாரின் பாடல்களில் இயற்கை வருணனைகள் இடம் பெற்றுள்ளதை, ‘‘இயற்கை வருணனைகள் வருகின்ற முறைமையை ஆராய்தற்குப் புறப்பாடல்களையும் இணைத்து நோக்குமிடத்து எல்லா நில வருணனைகளும் இடம் பெற்றிருக்கக் காணலாம்; ஆயினும் மலையும், மலை சார்ந்த இடமுமாகியக் குறிஞ்சிக் காட்சிகள் பெருவாரியாகப் பாடப்பட்டுள்ளது. முல்லை முதலான ஏனைய இயற்கை ஓவியங்கள் குறைவே” என்கிறார் மு.வரதராசனார் (பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை-ப.98).

Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

இயற்கை அரங்கில் நிலவும் காலநிலை மாற்றங்களை அவ்வையார் அந்தந்த நிலைகளுக்கேற்ப மாறிமாறித் நீதிநூல்களிலும் தெளிவாகப் படம் பிடித்துக்காட்டுகிறார்.

**அகநானூற்றில் இயற்கை**

அகநானூற்றில் அவ்வையின் நான்கு பாடல்களும் பாலைத் திணைக்கு உரியனவாக அமைகின்றன. எல்லையற்று பரந்து விரிந்து கிடக்கும் நீல வானத்தைத் தொட நினைக்கும் பெரிய மலைகளையும் போற்றிப் பாராட்டுவதை இவர் தம் அழகியச் சொல்லோவியங்களில் காண முடிகிறது.

**சூரியன்**

**“வானம் ஊர்ந்த வயங்குஒளி மண்டிலம்”** **(அகம் -11)**

வானத்தில் ஒங்கி உயர்ந்து விளங்கும் நெருப்பு பந்தானது பூமியில் உள்ள அனைவருக்கும் நல்லவர், கெட்டவர் என்ற எவ்வித பாகுபாடும் இல்லாமல் வெளிச்சத்தைத் தருகிறது என்று பாடுகிறார்.

**பறவையும் பூமாலையும்**

அழகிய நீலநிற வானத்தில் பறவைகள் பறப்பது நம் கண்களுக்கு மிகவும் இனிமையைத் தரக்கூடியது.அதிலும் வெண்ணிறமுடைய நாரைக் கூட்டமானது வரிசையாக மிகவும் அழகாகப் பல்வேறு அழகிய வடிவங்களில் கண்களுக்கு மலர் மாலையைப் போல் தோன்றியுள்ளது.

**“விசும்பு விசைத் தெறித்த கூதளங் கொதையின்**
**பசுங்கால் வெண்குருகு”** **(அகம் 273:1-2)**

கூதள மலர்களைக் கொண்டு கட்டிய ஒரு மாலையினை வானில் வீசி எறிந்தால் எப்படி இருக்குமோ?, அவ்வாறு இருந்தது என்று பறக்கும் நாரைகளின் கூட்டத்தை, வருணித்துப் பாடுகிறார். அழகிய நீல வானத்தில், மேகமானது இருள் சூழ்ந்து காணப்படுகிறது.

Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

மிகப்பெரிய கொல்லிமலையின் உச்சியில் தோன்றும் நீரானது, வேகமாக பெருக்கெடுத்து ஓடிவந்து, கீழே வீழ்கின்ற அருவியாகக் காட்சியளிக்கிறது என்பதை, சொல்லோவியமாக விளக்குகிறார்.

**நற்றிணையில் இயற்கை**

நற்றிணையில் முல்லைத் திணையில் மூன்றும், நெய்தல் திணையில் இரண்டும், மருதத் திணையில் ஒன்றும், குறிஞ்சியில் ஒன்றும் என அவ்வையார் ஏழு பாடல்களைப் பாடியுள்ளார் இடி, மின்னல், என மாலை நேரம் மழை வருவதற்குரிய நிலைகளை வருணிக்கிறார்.

**“கேழ்கிளர் உத்தி அரவுத் தலை பனிப்ப**
**படுமலை உருமின் உரற்று குரல்”** (நற்-129;7,8)

என்று அத்தகுப் பேராற்றலானது மேகத்தின் திரள் மலையடுக்கின் சாரலில் வாழும் பாம்புகள் பயப்படுமாறு விரைந்தெழும் இடியோசையானது வருத்துகிறது. இடியின் துணையுடன் காற்றோடு கலந்து வரும் மேகத்திரளானது அனைவரையும் அஞ்சச் செய்கிறது என்பதை அழகுபட வருணிக்கிறார்.

**கதிரவனின் மறைவு**

கதிரவன் மலையின் பின்பு சென்று மறைந்தான் என்பதை இதழ் குவிந்த நெய்தல் மலரும் மலர்ந்தது. மாலை நேரத்தில் மேற்குத் திசையில் கதிரவன் மறைந்தான், அதனால் கிழக்குத் திசையில் நிழல்கள் நீண்டன,ஞாயிற்றின் தோற்றமானது செந்நிறமாகத் தோன்றியது; நிலத்தின் வெப்பம் தணிந்தது என்று அவ்வை பெருமாட்டி அழகாக வருணிக்கிறார்.மேலும்,

**“காயாக் குன்றத்துக் கொன்றை போல**
**மாமலை விடரகம் விளங்க மின்னி**

**……………………………….**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

.......................................

**வியலிரு விசும்பகம் புதையப் பாஅய்ப்**
**பெயல் தொடங் கினவே பெய்யா வானம்”** **(நற்-371)**

நீலநிறமுடைய வானமானது கருநிற மேகத்தை மறைத்துள்ளது என்றும், அம்மேகக் கூட்டத்திடையே தோன்றும் மின்னல் ஒளியால் பெரிய மலையகத்திலிருந்தப் பிளவுகளைக் காண முடிகின்றது என்றும்,வானகத்தில் தோன்றும் மின்னல் ஒளியானது பளிச்சென வீசிய மேகத்திரளானது மழை பொழியத் தொடங்கியது என சிறப்பாக வருணிக்கிறார்.

**குறுந்தொகையில் இயற்கை**

இயற்கையின் பல்வேறு அழகினில் அவ்வையார் அவரது கற்பனைச் செறிவினில் பல்வேறு நிலையில் வருணிக்கிறார். பாடலைப் பயில்வோரின் செவிகளில் இனிமைத் தரக்கூடியது.வெம்மையான பாலைநில சூறைக் காற்றானது வேகமாக வீசி மரக்கிளையுடன் பறக்கிறது. அவ்வாறு பரவி வரும் காற்று உலர்ந்து இருக்கும் வாகை நெற்றுகளைத் தாக்கி ஒலியைக் கிளர்ந்தெழச் செய்கிறது என்பதை,

**“வெந்திறற் கடுவெளி பொங்காப் போந்தென**
**நெற்றுவீளை உழிஞ்சில் வற்றல் ஆர்க்கும்**
**மலையுடை அருஞ்சுரம்”** **(குறு 39;1-3)**

என்று எழிலுற வருணிக்கிறார்.மேலும், நீர் வளமும், நில வளமும் நிறைந்த வயல் சூழ்ந்த இடங்களையும், தம் பாடல்களுக்குப் பின்னணியாக அவ்வையார் அமைத்துள்ளார்.

**“அரிற்பவர்ப் பிரம்பின் வரிப்புற விளைகனி**
**குண்டுநீ ரிலஞ்சிக் கெண்டை கதூஉம்**
**தண்டுறை ஊரன்”** **(குறுந்-91)**

என்று நீர்நிலைக் காட்சிகளைப் படம் பிடித்து காட்டுகிறார்.

Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

நெருங்கியும், பிணங்கியும் உள்ள பிரம்பங் கொடியில் விளைந்த பழத்தைக் குளத்து மீன்கள் கொத்தும் காட்சியை அழகாக வருணிக்கிறார். மேலும், நீர் நிறைந்தக் குளத்தின் அடியில் தன் அழகியத் தண்டினை ஊன்றப் பெற்றக் குவளை மலரானது கொடியக் கோடை வெயில் வாட்டினாலும் வாடாதத் தன்மை உடையது. ஏனெனில், அதன் தண்டு நீரில் பதிந்துள்ளது என்று திறம்பட வருணிக்கிறார்.

## புறநானூற்றில் இயற்கை

சங்க அகப்பாடல்களைப் போன்று புறப்பாடல்களில் இயற்கை அதிகமாக இடம் பெறவில்லை, இதற்கான இயற்கையின் தன்மை இடம்பெறுவது குறித்த காரணங்களை ஆராய்ந்த வ.சுப.மாணிக்கம், "வீரம், கொடை, புகழ் என்பனவெல்லாம் புறத்திணைப் பொருளான இத்திணைக்கு முதற்பொருள், கருப்பொருள் என்று அவர் கூறவில்லை. புறப்பாடல்களிலும் முதலும் கருவுமாகும் அமைப்பு முறையனாது காணவில்லை" என்று (வ.சுப.மாணிக்கம் - தமிழ்க் காதல்-ப.208) குறிப்பிடுகிறார். ஆதலால், பொதுவாக சங்க இலக்கியப் புறப்பாடல்களில் இயற்கைக்கான இடமும் குறைவாகவுள்ளது. எனினும், புறநானூற்றில் முப்பத்துமூன்று பாடல்கள் அவ்வையார் பாடியுள்ளார். புறப்பாடல்களில் போர், அறம், அரசியல் என்ற நிலைகளில் தான் காணப்படுகிறது. ஆனால், புறநானூற்றுப் பாடல்களில் இயற்கையைப் பற்றி சிற்சில இடங்களில் வருணிக்கப்படுகிறது,

## ஞாயிறும் திங்களும்

தகடூரில் நல்லாட்சிப் புரிந்து வந்த அதியன், சேரனுடன் போர் புரிந்து உயிர் துறந்தான். அதனைக் கண்ட அவ்வை, அவன் ஆட்சியின் தன்மைக்கும் புகழுக்கும் திங்களையும் ஞாயிற்றையும் ஒப்பிட்டு கூறுகிறார்,

Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

**“திங்க ளன்ன வெண்குடை**

**ஒண் ஞாயி றன்னோன் புகழ்மா யலவே” (புறம் 231;5-6)**

அதியனின் ஆட்சித் திங்களைப் போலக் குளிர்ச்சி உடையது; அதியனின் புகழானது ஞாயிற்றைப் போன்றது; ஞாயிற்றின் (கதிரவனின்) ஒளியை என்றுமே யாராலும் மறைக்க முடியாது. அதே போன்று அதியனின் புகழையும் மறைக்க முடியாது என்று அவ்வையார் வருணிக்கிறார். சான்றாக, “புறப்பொருள் நூலாகியப் பதிற்றுப்பத்தில் இயற்கை வளம் காட்டப்படுகிறது. மலை வளமும், நிலவளமும், கடல் வளமும் கொண்ட சேர நாட்டின் வளம் ஒவ்வொரு பத்திலும் காணப்படுகிறது”. (பதிற்றுபத்து - பா. எண்.23) என்பதைச் சங்க இலக்கிய நூல்களின் வாயிலாகத் தெற்றென அறியமுடிகிறது.

**நீதி நூல்களில் அவ்வையார்**

**இயற்கை - மனிதனின் நண்பன்**

இயற்கையை மனிதனின் வாழ்வியல் ஆசிரியர் என அவ்வையார் எடுத்துரைக்கிறார். இவரின் பாடல்கள் கூறுவது, இயற்கை மனிதனை நல்லொழுக்கத்திற்கு வழி நடத்துகிறது. இயற்கையை மதித்தால் வாழ்வு வளமுறும். அறம், எளிமை, நன்றி, ஒழுக்கம் என இயற்கை கற்றுத்தரும். அவ்வையின் ஆத்திசூடியில் குறிப்பிடும்,

**“அறம் செய விரும்பு”** (ஆத்திசூடி 1)

இவை நேரடியாகவே இயற்கைத் தன்மையோடு ஒத்துப் போகின்றன. இயற்கை எல்லோருக்கும் சமமாக நல்லதையே வழங்குகிறது. அதுபோல மனிதனும் அனைவருக்கும் அறம் செய்ய வேண்டும் என்பதையே எடுத்துரைக்கிறார்.

Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

**மரங்கள், காடுகள் மற்றும் இயற்கை**

அவ்வையார் பாடல்களில் மரங்களும், காடுகளும் பெரும் இடம் பெற்றுள்ளன.

மரங்கள் நிழல் தருபவை, பழம் தருபவை; மனிதனுக்குப் பயன்படாமல் எதையும் வைத்துக் கொள்ளாது; தன்னலமற்றத் தன்மையை மரங்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய முக்கியப் பாடமாக அவ்வையார் எடுத்துரைத்தார். அவர் பாடிய வரிகளில்,

**“கற்றது கைமண் அளவு, கல்லாதது உலகளவு”**

**(ஔவையார் தனிபாடல்-வெண்பா.40)**

என்று மரங்கள் போல, மனிதனின் அறிவு வளர வேண்டும் என்றுரைக்கிறார்.

**மலர்கள் மற்றும் பசுமை நிலம்**

மலர்கள் இயற்கையின் அழகும், மணமும் கொண்டவை. அவை மனித வாழ்வின் இனிமையையும் குறிக்கின்றன. மலர்கள் சிறியவையாக இருந்தாலும், தம் மணத்தைச் சுமந்து தருகின்றன. மனிதன் எவ்வளவு சிறியவனாக இருந்தாலும், தன் பண்பால் உலகை அழகு படுத்தலாம் என்கிறார் அவ்வையார்.

**“தோன்றின் புகழோடு தோன்றுக;**
**இல்லாதே இனிதே அகலாது ஓம்பு”**

**(ஆத்திசூடி 46 )**

எனவே, மலர் போல வாழ்ந்து, உலகை மணமூட்ட வேண்டும் என்கிறது பாடல் வரி.

Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

**ஆறுகள், நதிகள் மற்றும் நீர்**

அவ்வையார் பாடல்களில் நீரின் பெருமை இடம் பெற்றுள்ளது. நீர் இல்லாமல் உயிர் வாழ முடியாது. நதி ஓடும் போதெல்லாம், அது அனைவருக்கும் சமமாகப் பயன் தருகிறது. நீர் போல மனிதனும் பிறருக்குப் பயனுள்ளதாக வாழ வேண்டும்.

**“நீரினும் நன்றாக கருதி ஒழுகு”** (ஆத்திசூடி 37)

என்று நதியின் ஓட்டத்தைப் போல மனிதன் வாழ்க்கையில் நற்பண்புடன் ஓட வேண்டும் என்று அவ்வையார் அறிவுறுத்துகிறார்.

**வானம், காற்று, மழை**

வானம், மேகம், காற்று, மழை ஆகியவை அவ்வையார் பாடல்களில் பல இடங்களில் இடம்பெறுகின்றன. மழை வரும்போது நிலம் செழிக்கிறது. அதுபோல அறிவு மழை வந்தால் மனம் செழிக்கும். காற்று போல எளிமையாக வாழ வேண்டும்.

**“மழைபெய்யின் உலகம் வளரும்; அறம் செய்யின் மக்கள் வளரும்”** (ஆத்திசூடி 46)

இயற்கையும் அறமும் ஒரே தரத்தில் நிற்கின்றன என்பதை வெளிப்படுத்துகிறது.

**பறவைகள் மற்றும் விலங்குகள்**

அவ்வையார் பாடல்களில் பறவைகள் சுதந்திரத்தின் அடையாளமாகவும், விலங்குகள் பண்பாட்டின் வெளிப்பாடாகவும் காணப்படுகின்றன. குயிலின் இனிமையானக் குரல், வானம்பாடியின் உயர்ந்த பறப்பு, தேனீயின் உழைப்பு, எறும்பின் ஒற்றுமை அனைத்தும் மனிதனுக்குப் பாடமாக அவ்வையார் எடுத்துரைத்தார்.

**“எண்ணெண்ணித் துணிக கருமம்;**
**எண்ணாமை என்னாமை யாகும்”** (ஆத்திசூடி 109)

Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

என எறும்பின் பொறுமையும் திட்டமிடலையும் நினைவுப்படுத்துகிறது.

**இயற்கை – அறநெறி போதைகள்**

அவ்வையார் இயற்கையை வைத்து பல நெறிமுறைகளைச் சொல்லியுள்ளார்,

இயற்கைத் தன்னலமற்றது, நாமும் அப்படியே வாழ வேண்டும். இயற்கை அனைத்திற்கும் சமமாகப் பயன் தருகிறது. மனிதன் அனைவரிடமும் சமமாக நடக்க வேண்டும். இயற்கை அமைதியும் சாந்தியும் தருகிறது, மனித வாழ்விலும் அமைதி வேண்டும்.

**உழைப்பும் இயற்கை**

அவ்வையார் உழைப்பை இயற்கை மூலம் எடுத்துக் கூறுகிறார். மரம் பயிரிடும் விவசாயியின் உழைப்பு, வேரில் ஊறும் தண்ணீர் போல, வாழ்க்கையை வளப்படுத்தும். உழைப்பு இல்லையெனில் இயற்கை வற்றும், வாழ்க்கையும் வற்றும் என்கிறார்.

**“உழுதுண்டு வாழினும் காழுதுண்டு வாழ்க”** (ஆத்திசூடி 21)

இங்கு உழைப்பின் மதிப்பு இயற்கையோடு இணைக்கப்படுகிறது.

**ஒழுக்கமும் இயற்கை**

அவ்வையார் இயற்கையை எடுத்துக்காட்டாகக் கொண்டு ஒழுக்கம் பற்றி எடுத்துரைக்கிறார். மரம் எவ்வளவு பழம் கொடுத்தாலும், தன்னைப் பற்றிய பெருமையைச் சொல்லாது. ஆறு எப்போதும் தாழ்வானப் பக்கம் பாய்கிறது;

**“தாழ்மை பெருமை தரும்”** (ஆத்திசூடி 53)

எனவே, தாழ்மை வாழ்க்கையின் ஆழம் என்பதை எடுத்துரைக்கிறது.

Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

**மனித வாழ்க்கையின் பிரதிபலிப்பு - இயற்கை**

அவ்வையாரின் பாடல்கள் சுட்டுவது, மழை - வளம் தரும். சூரியன் - ஒளி தரும். நிலம் - உணவு தரும். இவை அனைத்தும் மனிதனின் வாழ்க்கை நெறிக்குப் பாடமாகக் கூறப்படுகின்றன.

**சமூகப் பார்வையில் இயற்கை**

அவ்வையார் இயற்கையைப் பாடியதோடு மட்டும் இல்லாமல், அதை சமூகப் பாடமாக மாற்றுகிறார். மழை பெய்தால் எல்லோரும் வளம் அடைவார்கள். மழைத் தவறினால் எல்லோரும் வறுமை அடைவார்கள். இதன் மூலம் இணக்கமும் ஒற்றுமையும் சொல்லுகிறார்.

**"மழைபெய்தால் உலகம் வளம் பெறும்"** (ஆத்திசூடி 21)

**அவ்வையார் பாடல்களின் எளிமை**

சிறுவர்கள் மனதில் பதியும்படி இயற்கை உருவகங்கள் மூலம் பாடியுள்ளார். பாடல்கள் சிறியது; ஆனால் உள்ளடக்கம் மிகப்பெரியது. இயற்கையைப் பயன்படுத்தியதால், அனைவருக்கும் எளிதில் புரிந்த்து. இன்றைய உலகம் சூழலியல் சிக்கல்களை எதிர்கொள்ளும் நிலையில், அவ்வையார் சொன்ன இயற்கை சார்ந்த கருத்துகள் மிகவும் பொருத்தமானவை. மண்ணை காக்க வேண்டும். நீரைச் சேமிக்க வேண்டும். மரங்களை வளர்க்க வேண்டும். இவை அனைத்தையும் அவ்வையார் பாடல்கள் உணர்த்துகின்றன.

**ஆய்வு முடிவுகள்**

- இயற்கையுடன் உறவு கொண்டு வாழ்ந்தப் பண்டையத் தமிழரின் வாழ்க்கைச் சிறப்பினை விளக்கிக்காட்டுவன நம் தமிழ் இலக்கியங்கள் தான்.

Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

- இன்றையக் காலக்கட்டத்தில் காணப்படும் போக்குவரத்து வசதியோ, அறிவியல் கருவிகளோ, அவற்றைப் பயன்படுத்தும் வாய்ப்புகளோ அன்று இல்லை; என்றாலும் அக்காலத் தமிழ் புலவர்கள் பலரால் நடந்து சென்றே செடி, கொடி, மரங்கள், மலர்கள், மலைகள் இடி, மின்னல், காற்று, மழை, போன்றவையும், மேலும் பல வகையான இயற்கை சார்ந்தப் பொருட்களை அவற்றின் பண்பு, நிறம், வடிவம் எனப் பல்வேறு வகைகளை அறிந்து அவற்றை மனித வாழ்க்கையொடு தொடர்புபடுத்தி வாழ்வியல் உண்மைகளை உணர்த்தினர்.
- மனித வாழ்க்கயைச் சித்தரிக்க இயற்கையைப் பின்புலமாக அவ்வைக் கையாண்டார்.
- அவ்வையாரால் வருணிக்கப்படும் இயற்கைக் காட்சிகள் படிப்பவரின் சிந்தனைக்கும், செவிக்கும் விருந்தூட்டி அனைவருடைய மனதிற்கும் இனிமையைத் தருகிறது.
- அவ்வையார் பாடல்கள் இயற்கையின் சிறப்பையும், அதன் வாழ்க்கைத் தொடர்பையும் மிக அழகாக எடுத்துரைக்கின்றன.
- இயற்கை எவ்வாறு மனித வாழ்வின் பகுதியாக இருக்கிறது என்பதை உணர்த்துகின்றன.
- இயற்கையோடு இணைந்து வாழ்ந்தால் தான் வாழ்வு வளம் பெறும் எனச் சொல்லுகின்றன.
- மரம், மலர், காற்று, நீர், மழை, பறவைகள் அனைத்தும் மனிதனுக்கு நல்லொழுக்கத்தை உணர்த்தும் ஆசிரியர்கள் என்கிறார் அவ்வையார்.
- இயற்கையே நம் வாழ்வின் வேராகும், இயற்கையை மதித்து வாழ்வதே அவ்வையார் போதனையின் சாரம் என்று கூறலாம்.

Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

## பார்வை நூல்கள்

1.முனைவர்.ச.வே. சுப்பிரமணியன், தொல்காப்பியம் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

2. ந.மு.வேங்கடசாமி நாட்டார், அகநானூறு, கழக வெளியீடு, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,சென்னை.

3.நராயணசாமி ஐயர், நற்றிணை, கழக வெளியீடு, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

4. பொ.வே.சோமசுந்தரனார், குறுந்தொகை, கழக வெளியீடு, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

5. சு.துரைசாமி பிள்ளை, புறநானூறு, கழக வெளியீடு, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

6. புலியூர்கேசிகன், ஔவையார் - தனிபாடல் திரட்டு, ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை.

7. மெய்யப்பன்.ச., நீதிநூல் தெளிவுரை,ஆத்திசூடி,மணிவாசகர் பதிப்பகம்,சென்னை.